

# மாவீரர்நாள் பேச்சுப்போட்டி 2020

**பிரிவு – 3 வயது (மழலை 1)**

**தாய்மொழி**

தமிழ் எனது தாய்மொழி.

அது தேன் போல இனிக்கும்.

தமிழை நாம் நேசிப்போம்.

தமிழராய் நிமிர்வோம்.

நன்றி! வணக்கம்.

# மாவீரர்நாள் பேச்சுப்போட்டி
# 2020

பிரிவு – 4 வயது (மழலை 2)

**கார்த்திகைப்பூ**



கார்த்திகையில் மலரும் பூ கார்த்திகைப்பூ.

இதில் சிவப்பு மஞ்சள் நிறங்கள் உள்ளன.

இதன் இதழ்கள் நெருப்பு எரிவது போல இருக்கும்.

கார்த்திகைப்பூ தமிழர்களின் பூ! மாவீரர்களின் பூ! தமிழீழத்தின் தேசியப் பூ.

நன்றி! வணக்கம்.

# மாவீரர்நாள் பேச்சுப்போட்டி
# 2020

**பிரிவு – 5 வயது (பாலர் நிலை)**

**அன்னையும் பிதாவும்**

அம்மா என்றால் அன்பு, அப்பா என்றால் அறிவு.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'.

அம்மாவும் அப்பாவும் எங்கள் மேல் காட்டும் அன்பு அளவிட முடியாதது.

அவர்கள் எங்களைக் கண்ணும் கருத்துமாகக் கவனிப்பார்கள்.

நாங்கள் அவர்கள் சொற்படி கேட்போம். நல்ல பிள்ளைகளாய் நடப்போம்.

நாங்கள் நன்றாகப் படித்தால் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள்.

நன்றி! வணக்கம்.

# மாவீரர்நாள் பேச்சுப்போட்டி 2020

பிரிவு - 6 வயது (வகுப்பு 1)

**கார்த்திகைப்பூ**

எங்கள் தேசியப் பூ கார்த்திகைப்பூ.

இது கார்த்திகை மாதத்தில் ஊரெல்லாம் பூத்துக் குலுங்கும்.

பூவின் மஞ்சள், சிவப்பு நிறங்கள் பார்ப்பவர் எல்லோரையும் கவரும்.

இப்பூவின் இதழ்கள் நெருப்பு எரிவதுபோல் இருக்கும்.

கார்த்திகைப் பூ எங்களது மாவீரர்களை நினைவுபடுத்தும்!

அவர்களது உறுதியான மனதைக் காட்டும்!

ஆகவே, மாவீரர் நாளில் கார்த்திகைப் பூவினால் மலர்வணக்கம் செய்கிறோம்.

ஆம்!

கார்த்திகைப்பூ … தமிழர்களின் பூ! மாவீரர்களின் பூ! தமிழீழத்தின் தேசியப் பூ.

நன்றி! வணக்கம்.

# மாவீரர்நாள் பேச்சுப்போட்டி 2020

**பிரிவு – 7 வயது (வகுப்பு 2)**

**பனைமரம்**

‘அழகான அந்தப் பனைமரம் அடிக்கடி நினைவில் வரும்’ என்கிறார் கவிஞர் காசி ஆனந்தன்.

எங்கள் தாயகத்தில்தான் பனைமரங்கள் நிறையக் காணப்படுகின்றன.

பனைமரத்தை கற்பகதரு என்பார்கள் பெரியவர்கள்.

கற்பக தரு என்றால் கேட்டதைக் கொடுக்கும் மரம் என்று பொருள்.

பனை மரத்தின் எல்லாப் பகுதிகளும் எங்களுக்குப் பயன்தரும்.

போர்க்காலத்தில் எங்கள் மக்களுக்கு உணவும் அளித்து, உயிரையும் காத்தது.

ஆம்! பனைமரம் தமிழீழத்தின் முக்கிய வளங்களில் ஒன்றாகும்.

அது ஒருவிதத்தில் எங்கள் அடையாளமும் ஆகும்.

நன்றி! வணக்கம்.



# மாவீரர்நாள் பேச்சுப்போட்டி 2020

பிரிவு – 8 வயது (வகுப்பு 3)

## அறம் வெல்லும்

'அறம் செய விரும்பு' என்றார் ஔவை. அறம் என்றால் உண்மை, நேர்மை, தர்மம் …

மனிதன் நல்ல பண்புகளுடன் வாழ அறம் வழிகாட்டுகின்றது. அறத்திலிருந்து விலகுகின்ற மனிதன் அழிவையே சந்திப்பான்.

ஆனால், அதர்மங்கள் ஒருபோதும் வென்றதில்லை. அறமே இறுதியில் வெல்லும்.

அநீதிக்கு எதிராக அகிம்சைப் போர் தொடுத்தவர்கள் எங்கள் திலீபன் மாமாவும் பூபதி அம்மாவும்!

அவர்கள் தங்கள் உயிர்களை தியாகம் செய்தது அறத்திற்காக அல்லவா?

ஆண்டாண்டு காலமாய் அறம் காத்து அரசாண்டது எங்கள் தமிழினம்.

ஆனால் இன்று அழிக்கப்பட்டு, நீதி மறுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, நாடிழந்து, ஊரிழந்து, வீடிழந்து உலகெங்கும் அகதியாய் அலைகிறது.

எங்கள் சொந்தங்களுக்காகப் போராட வேண்டியவர்கள் நாங்கள் அல்லவா? அறம் வெல்வதற்காய் நாங்கள் போராடுவோம்!

எமக்கான அறம் வெல்லும். இது உறுதி!

நன்றி! வணக்கம்.

# மாவீரர்நாள் பேச்சுப்போட்டி
# 2020

**பிரிவு – 9 வயது (வகுப்பு 4)**

**அன்னை பூபதி**

அன்னை பூபதி! உலகை ஒரு கணம் உலுப்பிய பெயர் இது! அந்நியர்களை அதிரவைத்த பூகம்பத்தின் பெயர்! தமிழீழ மக்களின் விடுதலை உணர்வின் தாரக மந்திரம் இது!

தனது பிறந்த இடமான மட்டக்களப்பில் உண்ணா நோன்பேற்றார் எமது அன்னை பூபதி.

‘சண்டையை நிறுத்து! சமாதானம் பேசு!’ என்ற கோரிக்கைகளைத்தான் அம்மா முன்வைத்தார். ஆதிக்கவாதிகள் அம்மாவின் கோரிக்கைகளை அலட்சியம் செய்தனர். பயமுறுத்திப் பார்த்தனர்.

முப்பது நாட்கள் எம் மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் தன்னை உருக்கினார் அன்னை பூபதி.

உலகிலேயே உண்ணாவிரதம் இருந்து உயிர்விட்ட முதற் பெண்மணி இவரே! அதனால்த்தான் அவரின் பெயரில் எங்கள் அன்னை பூபதி கலைக்கூடம் இயங்குகிறது.

புதிதாகப் பிறந்துவரும் எங்கள் புதிய தலைமுறைக்கும், பூபதி அன்னையின் தியாகத்தைச் சொல்லிவைப்போம்.

தமிழீழத்தின் வரலாறும் ஆண்டாண்டுக்கும் அத்தாயின் நாமம் சொல்லும்.

நன்றி! வணக்கம்.



# மாவீரர்நாள் பேச்சுப்போட்டி 2020

பிரிவு - 10 வயது (வகுப்பு 5)

## தியாகி திலீபன்

தற்கொடை என்னும் புனிதமான சொல்லின் முழுமையான உள்ளடக்கத்தை எமக்கு மட்டுமல்ல, உலகத்திற்கே புரிய வைத்தவன் திலீபன்.

அன்று, ஈழத்திலுள்ள ஊரெழு என்ற சிற்றூரில் பார்த்திபன் என்ற பெயருடன் ஓடி விளையாடித்திரிந்த அந்தச் சிறுவன்,
இன்று, திலீபன் என்ற தற்கொடையாளியாய், ஈழ மக்களின் மனங்களில் நீங்காத இடம்பெற்று வாழ்கிறான்.

பல்கலைக்கழகப் படிப்பிற்குத் தகுதியடைந்தபோதும் அதனைப் பக்குவமாய் ஒதுக்கிவிட்டுப் புரட்சிக்கு புறப்பட்டது அந்தப் புறா. அவனது விடுதலை வேட்கையினையும் ஆழமான அறிவினையும் கண்டு தமிழீழமே வியந்தது. பல்லாயிரக்கணக்கான மக்களின் அன்பிற்கு உரியவன் அவன்.

ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து, அவன் யாழ் நல்லைக் கந்தன் முன்றலில் நீராகாரம் இன்றி உண்ணா நோன்பைத் தொடங்கினான்.

இந்திய அரசு அவனது கோரிக்கைகளை ஏற்று அவனை உயிர்பிழைக்க வைக்கும் என்றே தமிழீழ மக்கள் நம்பியிருந்தனர்.

ஆனால், எமது மக்களின் நம்பிக்கை பொய்த்துப் போனது. ஆம்! 12 நாட்களின் பின்னர் திலீபன் எம்மை எல்லாம் விட்டுவிட்டு உயிர் துறந்தான்.

உலகிலேயே நீர்கூட இன்றி உண்ணாவிரதம் இருந்து உயிர்விட்ட முதற் போராளியாய் வரலாறு இவனைப் பதிந்துகொண்டது.

ஒரு நிமிடம் கூட ஓயாமல் எமது விடுதலைக்காக உழைத்த தியாகி திலீபன் எமது மனங்களில் அணையாச் சுடராகி ஒளிர்கிறான்.

வாழ்க திலீபனின் புகழ்! வெல்க தமிழீழம்!

நன்றி! வணக்கம்.



# மாவீரர்நாள் பேச்சுப்போட்டி 2020

**பிரிவு – 11 வயது (வகுப்பு 6)**

## தமிழ் எங்கள் தாய்மொழி

தமிழே! தமிழே! எம்தாயே!
இத்தரணியர் போற்றும் தமிழ்த்தாயே!
அன்றும் இன்றும் என்றும் கன்னி நீ!
அமிழ்தம் ஆன எங்கள் அன்னை நீ!

எங்கள் தாய்மொழியாம் தமிழ்மொழி தேனினும் இனிமையானது. அமிழ்தப் பாலாய் எமது அன்னையரால் எமக்கு ஊட்டப்பட்டது. அதனால் எம் ஊனோடும் உயிரோடும் கலந்துவிட்டது.

எம் வாழ்வோடு என்றும் கலந்துவிட்ட எம் தாய்மொழி தமிழை நாம் சுவைத்துப் பார்க்கவேண்டாமா? ருசித்துப் பார்க்கவேண்டாமா? ரசித்துப் பார்க்கவேண்டாமா? அப்பொழுதுதானே அதன் அருமை, பெருமை, செழுமை, வளமை என அத்தனையையும் நாம் உணரமுடியும்.

எம் தாய்மொழி தமிழ் எப்பொழுது தோன்றியது என்று எவராலும் அறுதியிட்டுச் சொல்லமுடியவில்லை. காரணம், அதன் தொன்மை அளவிடமுடியாதது.

கம்பன், வள்ளுவன், இளங்கோவன், பாரதி, பாரதிதாசன், காசி ஆனந்தன், புதுவை இரத்தினதுரை என எண்ணற்ற புகழ்பெற்றோரை வாரி வழங்கியிருக்கிறது.

சொற்சிறப்பு, பொருட்சிறப்பு, கவிச்சிறப்பு உடையது நம் தமிழ்.

‘சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே’ என்கிறார் பாரதி.
‘தமிழ் என் உயிர்’ என்கிறார் பாரதிதாசன்.
‘அகரமே எழுத்துகளுக்கெல்லாம் முதல்’ என்கிறார் வள்ளுவர்.
‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்கிறார் கணியன் பூங்குன்றனார்.

உலகில் பல மொழிகள் அழிந்துவிட்டன. ஆனால், நம் தமிழ்மொழியோ, அன்றிலிருந்து இன்றுவரை ஆல்போல் தழைத்து, சீரும் சிறப்பும் பெற்று சிறந்தோங்கி நிற்கின்றது.

தமிழர் நாம் நம் தாய்மொழியாம் தமிழை எண்ணிப் பெருமைப்படுவோம். அதன் சிறப்புணர்ந்து மார்தட்டுவோம்.

வாழ்க நிரந்தரம்!
வாழ்க தமிழ்மொழி!
வாழிய வாழியவே!

நன்றி! வணக்கம்.



# மாவீரர்நாள் பேச்சுப்போட்டி 2020

**பிரிவு – 12 வயது (வகுப்பு 7)**

**மாவீரர் நாள்**

கார்த்திகை 27 …

எங்கள் மாவீரர் நாள் … தமிழர் வாழுமிடமெங்கும் எங்கள் மாவீரரை நெஞ்சிலிருத்தி உறுதி பூணும் நாள். ஆயிரம் ஆயிரமாய் ஆகுதியான எங்கள் சொந்தங்களை நினைவு கூரும் நாள் … முதல் வேங்கை சங்கர் மாமா மண்ணில் விதையாய் வீழ்ந்த நாள் …

‘மாவீரர் யாரோ என்றால் மரணத்தை வென்றுள்ளோர்கள்’

ஆம்! மாவீரர்கள் மரணித்தபோதும், அவர் பெயரும் புகழும் அழியாது வாழ்கிறது, வரலாறாக…

இளவயதின் சுகங்கள் துறந்து, தாய் மண்ணே பெரிதென்று எண்ணித் துணிந்தவர்கள் இவர்கள். வரியுடை தரித்து கடல், தரை, ஆகாயம் என எங்கும் சுழன்று தமிழீழத் தாயின் விடுதலையையே உயிர் மூச்சாகச் சுவாசித்தவர்கள் இந்த வீர மறவர்கள்.

இவர்கள் தமக்கென வாழாத புனிதர்கள். எங்களின் நல்வாழ்வும் தமிழீழ மண்ணின் விடுதலையுமே இவர்களது குறிக்கோள். எனவேதான் விதையாகி வீழ்ந்தார்கள் விருட்சமாவோம் என்ற நம்பிக்கையுடன்.

இந்த மாவீரர்களின் இலட்சியம் நிறைவேறியதா மக்களே? அவர்கள் பெரும் கனவுகளுடன் சிறுகச் சிறுகக் கட்டியெழுப்பிய நம் மண்ணின் இன்றைய நிலையைப் பார்த்தீர்களா சொந்தங்களே! ஒரு கணம் சிந்தியுங்கள்.

மாவீரர்களது கனவை நிறைவேற்றாது விட்டால் காலம் எம்மீது பழிசொல்லாதா? எம் குற்ற உணர்வே எங்களைக் கொல்லாதா? சொல்லுங்கள்!

உறவுகளே! எம்மிடம் அறிவும் ஆற்றலும் உள்ளது, உலகப்பரப்பில் மாற்றங்களைக் கொண்டு வரும் திறன் உள்ளவர்கள் நாங்கள். எம்மண்ணின் விடுதலைக்கு அதனைப் பயன்படுத்துவோம். தமிழீழம் காண்போம், மாவீரர் கனவை நனவாக்குவோம் என்று, கல்லறை மேனியர் கண் திறக்கும் இந்தக் கார்த்திகை நாளிலே உறுதியெடுப்போம்.

மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை முடிசூடும் தமிழ்மீது உறுதி!

வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன் வரலாறு மீதிலும் உறுதி!

விழிமூடி இங்கே துயில்கின்ற வேங்கை வீரர்கள் மீதிலும் உறுதி!

இழிவாக வாழோம்! தமிழீழப் போரில் இனிமேலும் ஓயோம் உறுதி!

நன்றி!

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

# மாவீரர்நாள் பேச்சுப்போட்டி
# 2020

பிரிவு – 13 வயது (வகுப்பு 8)

**முன்னிலைப்படுத்தல்**

புலம்பெயர் வாழ்வில் தாய்மொழி

# மாவீரர்நாள் பேச்சுப்போட்டி
# 2020

பிரிவு – 14 வயது (வகுப்பு 9)

**முன்னிலைப்படுத்தல்**

தமிழரின் எதிர்காலமும் இளையோரின் பங்கும்

# மாவீரர்நாள் பேச்சுப்போட்டி
# 2020

**பிரிவு – 15 வயது (வகுப்பு 10)**

**முன்னிலைப்படுத்தல்**

பறிபோகும் தாயகம்

- வரலாற்றுக்காலம் தொடக்கம் காலனித்துவத்திற்கு முன்புவரை
- காலனித்துவக்காலம் தொடக்கம் சிறீலங்கா சுதந்திரம் பெற்றதுவரை
- 1948 தொடக்கம் 2009 வரை
- 2009 இற்குப் பின்னரான காலம்